DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

............

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT PALLIPATTU

Calendar

Miscellaneous

Preliminary Register                                Case No. C.C. 9 of 2020  PW: 1

Sessions

| | |
|---|---|
| | Prosecution |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : ஆண்டாள் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 11/10/2021.

தேதி..11.10.2021, C.C. 9/2020, அ.த.சா.1 ஆண்டாள் அவர்களின் முதல் விசாரணை..

நான் நடுப்பள்ளி கிராமத்தலிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஞாயிற்றுக் கிழமை காலை 5.30 மணிக்கு நான் வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்த போது என்னிடம் தண்ணீர் வீடு எங்கு என்று கேட்டார்கள். அது பக்கத்து வீடு என்று சொன்னேன். அவர்கள் பக்கத்து வீட்டுக்கு போகாமல் சிறிது தொலைவில் சென்று திரும்பி வந்தார்கள். ஏன் அங்கு செல்லாமல் திரும்பி வருகிறீர்கள் என்று நான் கேட்டபோது என்னுடைய கழத்தில் இருந்த செயினை பிடித்து இழுத்து என்னையும் சேர்த்து இழுத்து இரு சக்கர வாகனத்தில் எனது செயினை அறுத்து கொண்டு சென்று விட்டார்கள். இப்போதும் என்னுடைய கழுத்தில் அந்த காயங்கள் இருக்கிறது. நான் அப்போது சத்தம் போட்டேன் எனது பக்கத்து வீட்டில் இருக்கும் எனது மூத்தார் மகன் வந்து விசாரித்த போது நான் நடந்ததை சொன்னேன். இருசக்கர வாகனத்தில் ஆஜர் எதிரி தான் பின்னால் அமர்ந்து கொண்டு என்னுடைய செயினை பறித்தனர். இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் முகமூடி அனிந்திருந்ததால் நான் அவரை பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு அ.த.சா.ஆ 1 ஆகும். திருடு போன நகை நான் நீதிமன்றத்தில் மனு செய்து நான் திரும்பப்பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள செயின் என்னுடைய திருடுபோன செயின் தான். அந்த புகைப்படம் அ.த.சா.ஆ 2 ஆகும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

## 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

அ.த.சா. ஆ1 புகார் மனுவை நான் எழுதவில்லை போலீசார் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். ஆஜர் எதிரி வாகனத்தில் பின்னால் அமர்ந்து எனது செயினை பறித்தார் என்று என்னுடைய புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொன்னேன். சம்பவம் நடந்த நேரத்தில் பொழுது விடியவில்லை என்றால் சரிதான். எனது நகையை மீட்டுத்தர கோரி தான் புகார் கொடுத்தேன் என்றாலும் எதிரிகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புகார் கொடுக்கவில்லை என்றாலும் சரிதான். திருடுபோன நகை என்னுடைய மகனுக்கு சொந்தமான நகை. திருடுபோன நகை என்னுடையது என்பதற்கு ஆதாரம் ஏதும் நான் போலீசாரிம் ஒப்படைக்கவில்லை. எனது நகை எனக்கு கிடைத்துவிட்டதால் எதிரிகளின் மீது மேல் நடவடிக்கை எதுவும் வேண்டாம் என்றால் சரிதான். எதிரிகள் வந்த வாகனத்தை பற்றி மற்றும் எதிரிகள் அணிந்திருந்த ஆடைகள் பற்றி எனக்கு ஏதும் தெரியாது. ஆஜர் எதிரியை இதற்கு முன்பு நான் எங்கும் பார்த்ததில்லை என்றால் சரிதான். எதிரிகளை போலீசார் அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை சம்பவம் நடந்த அன்றே விசாரணை செய்தார்கள். போலீசார் கேட்டுக்கொண்டதின் பேரில் தான் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

## 2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் வெளியில் செல்லும்போதுதான் கண்ணாடி அனிவேன் என்றாலும் வீட்டு வேலை செய்யும் போது கண்ணாடி அனியமாட்டேன் என்றாலும் சரிதான். கண்ணாடி போட்டால்தான்

எனக்கு பார்வை சரியாக தெரியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த நேரம் கொஞ்சம் இருட்டாக இருந்தது என்றால் சரிதான். அதனால் ஆட்களை சரியாக என்னால் பார்க்கமுடியவில்லை என்றால் சரிதான். எனக்கு படிப்பறிவு இல்லாததினால் புகாரிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்த மறுநாள் தான் போலீசார் எதிரிகளை கைது செய்தார்கள் என்றால் சரிதான். போலீசார் சொல்லிதான் எனக்கு எதிரிகளை தெரியும் என்றால் சரிதான். சுமார் 5வருடத்திற்கு முன்பு என்னுடைய மகன் எனக்கு அந்த நகையை வாங்கிக் கொடுத்தார். அந்த நகையின் ரசீது ஏதும் நான் போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். திருடுபோன நகை எவ்வாறு இருந்தது என்று புகாரிலும் என்னுடைய வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் போலீசார் தனிப்பட்ட முறையில் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தார்கள். புகார் கொடுத்த போதுதான் என்னிடம் வாக்குமூலம் பதிவுசெய்தாகள் என்றாலும் பின்பு எப்போதும் என்னடம் இருந்து வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை என்றாலும் சரிதான். போலீசார் என்னிடம் புது நகையை கொடுத்தார்கள் என்றால் சரிதான். ஆனால் திருடுபோன நகை 5 வருடத்திற்கு முன்பு வாங்கிய நகை என்றால் சரிதான். 5 வருடத்திற்கு முன்பு வாங்கிய நகைக்கு பதிலாகத்தான் புது நகையை கொடுத்தார்கள் என்றால் சரிதான். நான் கொடுத்த புகரின் அடிப்படையில் எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்க்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.